**BSNL ஊழியர்கள் மற்றும் தொழிலாளி வர்க்கம்ஆகியவற்றின் ஒன்றுபட்ட போராட்டங்களை பலப்படுத்துக**

உழைக்கும் மக்களும், தொழிற்சங்க இயக்கமும் ஒரு கடுமையான சவாலை சந்தித்து வருகின்றன. உலகம் முழுமைக்கும் கவ்வி பிடித்துள்ள முதலாளித்துவ நெருக்கடி தொழிலாலர்களை துன்பத்தில் ஆழ்த்துகிறது. முதலாளித்துவ வர்க்கம் தனது லாபத்தை பாதுகாக்கவும், அதிகரிக்கவும் இந்த நெருக்கடியின் விளைவுகளை தொழிலாளர்களின் தலையில் சுமத்த முயற்சிகின்றது. தொழிலாளர்கள் மற்றும் சங்கங்களின் அடிப்படை உரிமைகள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறது. மக்களை பிளவுபடுத்த திருத்தல்வாத சக்திகளையும், அரசியல் கட்சிகளையும் பயன்படுத்துகின்றன. நமது நாட்டிலும் இதே போன்ற தாக்குதல்கல் நடைபெறுகின்றது; மோடி அரசாங்கத்தின் கீழ் அது மேலும் கடுமையாக்கப்படுகின்றது.

பொதுத்துறைகளை தனியார்மயமாக்குவது, வளர்ச்சி என்ற பெயரில் நியாயமற்ற முறைகளில் விவசாயிகளில் நிலங்கள் கையகப்படுத்தப்படுவது, தொழிலாளர்களின் உரிமைகள் பறிப்பு, அதற்காக தொழிலாளர் நலச்சட்டங்களில் திருத்தம், பல்வேறு கேந்திரமான துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை மேலும் மேலும் அனுமதிப்பது, EPF மற்றும் ஓய்வூதிய பலன்கள் மீதான தாக்குதல்கள், பெருமுதலாளிகளின் விருப்பத்திற்கேற்ப 'அமர்த்து. துரத்து' கொள்கைகளை அமுலாக்க அனுமதித்து பணிப்பாதுகாப்பை நீக்குவது, மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை ஊழியர்களுக்கான நியாயமான ஊதிய மாற்றத்தை மறுப்பது போன்ற நடவடிக்கைகளை மோடி அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. தேச பக்தி என்ற மந்திரத்தை சொல்லிக்கொண்டே இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இளைய பங்காளியாக மாற்றி விட்டது. மோடி அரசாங்கத்தில் மத அடிப்படைவாதிகள் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மதங்களை சேர்ந்த மக்களிடையே வெறுப்பை வளர்க்க ஊக்கப்படுத்துகின்றனர். உழைக்கும் வர்க்கத்தை பிளவுபடுத்த பிரிவினை வாத கொள்கைகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் இந்திய மற்றும் வெளிநாட்டு பெரு முதலாளிகள், உழைக்கும் வர்க்கத்தையும், மக்களையும், நாட்டின் இயற்கை வளங்களையும் பெருகி வரும் லாபத்திற்காக கொள்ளையடிக்கும் நோக்கத்தோடுதான் உள்ளன. பணமதிப்பின்மை மற்றும் பணமில்லா பொருளாதாரம் ஆகிய திட்டங்களை அரசு மேற்கொள்வதற்கு காரணம் என்பது கார்ப்பரேட் முதலாளிகளின் நலன்களுக்காக சாதாரண மக்களின் மீது துன்பங்களை தொடுப்பதுதான்.

தன்னை பாதுகாக்கவும், நீட்டிப்பதற்கும், முன்னேறுவதற்கும் உழைக்கும் வர்க்கம் ஒன்றுபட்டு இந்த தாக்குதலை தடுத்து நிறுத்தி எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நவம்பர் 2014ல் நடைபெற்ற கொல்கொத்தா அகில இந்திய மாநாட்டிற்கு பின் BSNLஐ பாதுகாக்க BSNL ஊழியர்களும் அதிகாரிகளும் ஒன்றுபட்டு 2015 ஏப்ரல் 20 மற்றும் 21ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தையும், துணை டவர் நிறுவனம் அமைக்கும் முன்மொழிவை எதிர்த்து 2016 டிசம்பர் 15 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தையும் நடத்தியுள்ளதை BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அனைத்திந்திய மாநாடு கணக்கில் எடுத்துக் கொள்கிறது. மேலும் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் செப்டம்பர் 2ஆம் தேதி BSNL ஊழியர்கள் அனைவரும் தொழிலாளி வர்க்கத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு எதிராக 12 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்ற இரண்டு பொது வேலை நிறுத்தங்களிலும் பங்கேற்றதையும் கணக்கில் கொண்டது. இந்த ஒன்றுபட்ட போராட்டங்களில் BSNL ஊழியர் சங்கம் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்தது என்பதை இந்த மாநாடு பெருமையோடு பதிவு செய்தது.

மக்கள் விரோத நவீன தாராளமயக் கொள்கைகளை பின்னுக்கு தள்ளவும், உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையை சீரழிக்க முயற்சிக்கும் பிரிவினை வாத சக்திகளை தோற்கடிக்கவும் BSNL ஊழியர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையை பலப்படுத்துவதும்,

ஆழப்படுத்துவதும், அகலப்படுத்துவதும் காலத்தின் கட்டாயம். BSNL பாதுகாக்கப்பட்டு முன்னேற்றவும், ஒரு நல்ல ஊதிய மாற்றத்தை அடையவும், நமது கோரிக்கைகள் தீர்வடையவும் இந்த ஒற்றுமை அவசியம். நம் நாட்டை, உழைக்கும் வர்க்கத்தை, மக்களை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாக்கவும், உண்மையான வளர்ச்சியை அடையவும், மக்களின் முன்னேற்றத்திற்கும், BSNL ஊழியர்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்த உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமை மிக மிக அவசியம்.

தாராளமயக் கொள்கைகளின் விளைவுகளுக்கு எதிரான போராட்டத்தை மட்டுமல்லாது, புதிய தாராளமய கொள்கைகளுக்கு எதிராகவும், மக்களுக்கான மாற்று பொருளாதார கொள்கைகளுக்காக போராடவும் கூடிய வகையில் உழைக்கும் வர்க்கத்தின் போராட்டத்தை அடுதத கட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.

இந்த காரியத்திற்காக தனது முழுப் பங்களிப்பை BSNL ஊழியர் சங்கம் கொடுக்க வேண்டும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.